RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar
Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari
Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar
Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R
Sr Vascular Surgeon
Dr Salins R
General Physician
Dr Pravoona E
Sr ENT Surgeon

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் | சென்னை, 28 நவம்பர் 2026 | ரூ.2/- | இதழ் - 139

இந்தியக் கடற்படையிடம் அதிநவீன போர்க்கப்பல் 'விந்தியகிரி' ஒப்படைப்பு: உள்நாட்டுத் தயாரிப்பில் புதிய மைல்கல்



சென்னை – 28 நவம்பர், 2026 இந்தியக் கடற்படைக்காக உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட ' விந்தியகிரி ' என்ற அதிநவீன போர்க்கப்பல், இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டும் நிறுவனத்தில் இன்று (2026 நவம்பர் 27) இதற்கான நிகழ்ச்சி நடைபெற்றது.

புராஜெக்ட் 17 ஏ திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஏழாவது, இறுதிப் போர்க்கப்பல் இதுவாகும். இதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட ஏழு போர்க்கப்பல்களும் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கர்நாடக மாநிலத்தில் உள்ள விந்தியகிரி மலைத்தொடரின் பெயர் இக்கப்பலுக்கு சூட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்பு இதே பெயரில் செயல்பட்ட போர்க்கப்பல், 1981 ஜூலை 8 முதல் 2012 ஜூன் 11 வரை 31 ஆண்டுகள் இந்தியக் கடற்படையில் சேவையாற்றியது.

புதிய விந்தியகிரி கப்பலில் நவீன ஆயுதங்கள், கண்காணிப்புக் கருவிகள், எதிரிகளிடம் எளிதில் சிக்காத வகையிலான தொழில்நுட்பம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. எதிரிக் கப்பல்கள், விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்களை வலுவாக எதிர்கொள்ளும் திறன் கொண்டது இந்தக் கப்பல்.

இந்த வரிசையில் முதல் கப்பலை உருவாக்க 84 மாதங்கள் ஆன நிலையில், விந்தியகிரி கப்பல் 68 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. முதல் கப்பல் ஒப்படைக்கப்பட்ட 23 மாதங்களுக்குள் ஏழு கப்பல்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.